ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2259/11 - 2021 දෙසැම්බර් මස 21 වැනි අඟහරුවාදා - 2021.12.21

*2259/11 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 5/2005*

***2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டம்***

*2 ஆம், 3 ஆம் மற்றும் 8 ஆம் பிரிவுகளின் கீழான கட்டளை*

*2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின் 2 ஆம், 3 ஆம் மற்றும் 8 ஆம் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, நீதி அமைச்சர் மொஹம்மட் அலி ஸப்ரி ஆகிய நான், இக்கட்டளை மூலம்,*

*(1) மத்தியஸ்தம் ஊடாக பிணக்குகளைத் தீர்த்து வைத்தல் தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் எந்த வகுதிகளைச் சார்ந்த பிணக்குகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டுமோ, அந்த வகுதிகளைச் சார்ந்த பிணக்குகளாக தனியாட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு இடையேயான மற்றும் தனியாட்களுக்கிடையேயான அல்லது நிறுவனங்களுக்கிடையேயான நிதிசார் வியாபாரக் கொடுக்கல் வாங்கல் ஒன்றிலிருந்து எழுகின்ற நிதிசார் பிணக்குகளாக இருத்தல் வேண்டுமெனத் தீர்மானிக்கின்றேன். இக்கட்டளையின் நோக்கத்துக்காக, ''நிறுவனம்'' என்பது, கம்பெனியொன்று அல்லது ஆட்களின் குழுவொன்று அல்லது தனிக் கூட்டிணைப்பொன்று அல்லது ஆட்களின் குழுவொன்று அல்லது தனிக் கூட்டிணைப்பொன்று எனப் பொருள்படும் ;*

*(2) இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள இடப்பிரதேசங்களை பிணக்குகளைத் தீர்த்து வைத்தல் நிறைவேற்றப்படுகின்ற விசேட மத்தியஸ்த சபை இடப்பிரதேசங்களாகக் குறித்துரைக்கின்றேன் ;*


1A - G 35622 — 60 (2021/12)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(3) இரண்டாம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட விசேட மத்தியஸ்த சபை இடப்பிரதேசங்களினுள் முழுமையாக எழுகின்ற அல்லது பகுதியளவில் எழுகின்ற மத்தியஸ்தம் ஊடாக பிணக்குகளைத் தீர்த்து வைத்தல் தொடர்பில் (1) ஆம் பந்தியின் கீழ் தீர்மானிக்கப்படுகின்ற பிணக்குகளின் வகுதி பற்றிய விடயப் பொருளின் பணப்பெறுமதி ஐந்து இலட்சம் ரூபாவுக்கு (ரூ. 500,000) குறைவானதாக இருத்தல் வேண்டுமென்பதனைக் குறித்துரைக்கின்றேன்.

சனாதிபதி சட்டத்தரணி மொஹம்மட் அலி ஸப்ரி ,
நீதி அமைச்சர்.

கொழும்பு,
2021, திசெம்பர் 19.

**அட்டவணை**

நிருவாக மாவட்டங்கள்

1. கொழும்பு
2. கம்பஹா
3. கண்டி
4. மொனராகலை
5. பொலனறுவை
6. அநுராதபுரம்

EOG 12-0220

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.